NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 10 Aug 2021

## செய்திக்கொத்து

# 55 வகை நீர்வாழ் உயிரினங்கள்

சிங்கப்பூர் நீர்த்தேக்கங்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட பல்லுயிர் ஆய்வு ஒன்றில், தனித்துவமிக்க நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் அவற்றின் உணவுச்சூழல் பற்றி தெரிய வந்துள்ளது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் உயிர் அறிவியல் துறை ஆய்வாளர்களுடன் சேர்ந்து பொதுப் பயனீட்டுக் கழகம் அந்த ஆய்வை மேற்கொண்டது. ஏழு ஆண்டுகள் நடந்த ஆய்வில் நாட்டின் ஒட்டுமொத்த நீர்த்தேக்கங்களின் நீரின் தரம் மற்றும் உயிரினச் சூழலை மேம்படுத்தும் வழிகளும் ஆராயப்பட்டன. சிங்கப்பூர் முழுவதும் உள்ள 17 நீர்த்தேக்கங்களில் மொத்தம் 55 மீன் வகைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு நீர்த்தேக்கத்திலும் ஒன்பது முதல் 21 மீன் இனங்கள் இருப்பதாக கழகத்தின் நீர் தரப் பிரிவின் உயிரியல் நிபுணர் டிரிசியா போ குறிப்பிட்டார். நீர்த்தேக்கங்களில் உருவாகாத மீன் வகைகள் அதிகம் ஆதிக்கம் செலுத்துவதாகவும் அவர் சொன்னார். தேவையற்ற மீன்களை நீர்த்தேக்கங்களில் விடுவிப்பதால் புதிய வகை மீன்கள் அங்கு வந்திருக்கலாம் என்றார் அவர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.